பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி - 620024

**Prof. R. Kalidasan**
Registrar (i/c)

BHARATHIDASAN UNIVERSITY
TIRUCHIRAPPALLI - 620 024
TAMILNADU, INDIA

*(Accredited with A+ Grade by NAAC in the 3rd Cycle with 3.32 CGPA: NIRF Rank: 41)*

**கடித எண்.4075/டி4/2024, நாள்: .04.2024.**

பெறுநர்

முதல்வர்
பல்கலைக்கழக இணைவு பெற்றக் கல்லூரிகள் / ஒப்புதல் பெற்ற நிறுவனங்கள்

அய்யா / அம்மையீர்,

பொருள்: இணைவு - தற்காலிக இணைவு பெற்ற பாடங்களுக்கு **2024-2025**-ஆம் கல்வியாண்டிற்கான இணைவு நீட்டிப்பு வழங்குதல் - இணைவு கோரும் பாடங்களின் பட்டியல் மற்றும் கட்டணம் செலுத்தக் கோருதல் - தொடர்பாக.

பார்வை:
1. ஆட்சிக்குழுத் தீர்மானம் எண் 2022.17, நாள்:14.02.2022
2. ஆட்சிக்குழுத் தீர்மானம் எண் 2023.08, நாள்:23.03.2023
3. துணைவேந்தர் அவர்களின் ஆணை நாள்: 06.04..2024

------

தங்கள் கல்லூரியில் / ஒப்புதல் பெற்ற நிறுவனத்தில் தற்காலிக இணைவு பெற்று நடைபெற்று வரும் பாடங்களுக்கு **2024-2025-**ஆம் கல்வியாண்டிற்கு இணைவு / ஒப்புதல் நீட்டிப்பு பெறுவதற்கானக் கருத்துருவினை உரிய கட்டணம் மற்றும் GST 18% உடன் **05.05.2024** தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தற்காலிக இணைவு/ஒப்புதல் நீட்டிப்பு வழங்குவதற்காக ஒவ்வொரு இளநிலை மற்றும் முதுநிலை பாடத்திற்கு (நிரந்தர இணைவு பெற்ற பாடங்கள் நீங்கலாக) பல்கலைக்கழகத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டண விபரங்கள் பின்வருமாறு:

| **Extension of Provisional Affiliation Fee (Except Government Colleges)** | | |
|---|---|---|
| **Completed years** | **Below 1000 students (First year admission)** | **Above 1000 students (First year admission)** |
| **1-5 years** | **Rs.5000/- + (18% GST Rs.900/-)** | **Rs.6000/- (18% GST Rs.1080/-)** |
| **6th year** | **Rs.6000/- + (18% GST Rs.1080/-)** | **Rs.7000/- + (18% GST Rs.1260/-)** |
| **Add Rs.1000/- every year (eg.7th year Rs.7000/- & Rs.8000 +GST 18% respectively, 8th year Rs.8000/- & Rs.9000/-+GST 18% respectively)** | | |

மேலும், இணைவு பெற்ற அனைத்து அரசுக் கல்லூரிகளுக்கும் தற்காலிக இணைவு நீட்டிப்புக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பினும் அக்கல்லூரிகள் ஒவ்வொரு கல்வியாண்டும் தற்காலிக இணைவு நீட்டிப்பு ஆணை பெற்றுக்கொள்ள வேண்டும். (நிரந்தர இணைவு பெற்ற பாட வகுப்புகள் தவிர)

பார்வை-1ல் காணும் ஆட்சிக்குழுத் தீர்மானத்தின் அடிப்படையில், 2022-2023 ஆம் கல்வியாண்டு முதல் ஒவ்வொரு கல்வியாண்டும் நிலையாக ஒவ்வொரு பாடத்திற்கும் கீழ்க்கண்டவாறு தற்காலிக இணைவு நீட்டிப்புக் கட்டணம் செலுத்த வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

| Sl.No. | Particulars | Amount per year + 18%GST (per programme) |
|---|---|---|
| 01. | Certificate Course | 6,000 |
| 02 | Diploma Course | 10,000 |
| 03 | P.G. Diploma Course | 12,000 |
| 04 | M.Phil. Programme | 16,000 |
| 05 | Ph.D. Programme | 30,000 |

இதே போல் பார்வை 2இல் கண்டுள்ள ஆட்சிக்குழுத் தீர்மானத்தின்படி, தற்காலிக இணைவுக்கட்டணத்துடன் 2023-2024 ஆம் கல்வியாண்டு முதல் சேவைக்கட்டணமாக ரூ.2000/- செலுத்தப்பட்டு வருகிறது.

இக்கட்டணத்தை திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துக்கு **இணையதளம் மூலமாக (ONLINE PAYMENT ONLY)** மட்டுமே செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பல்கலைக்கழக விதிமுறைகளின்படி, பல்கலைக்கழகத்திடமிருந்து தற்காலிக இணைவு/ஒப்புதல் நீட்டிப்பு ஆணை பெறாமல் 2024-2025-ம் கல்வியாண்டில் கல்லூரிகள்/நிறுவனங்கள் எந்த ஒரு பாடத்திற்கும் மாணவர் சேர்க்கை செய்யக்கூடாது எனவும், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு தொடர்ந்து பாடங்கள் நடத்தக் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. மீறி மாணவர் சேர்க்கப்பட்டாலோ, பாடங்கள் நடத்தப்பட்டாலோ ஒவ்வொரு பாடத்திற்கும் பல்கலைக்கழகத்தால் நிர்ணயிக்கப்படும் அபராத தொகையினை செலுத்த வேண்டியிருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கல்லூரியில் நடத்தப்படும் பாடங்களை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கோ அல்லது நிரந்தரமாக நிறுத்துவதற்கோ கல்லூரி விருப்பப்பட்டால், ஆட்சிக்குழுவின் முன்னனுமதி பெறுவதற்காக அதனை ஒவ்வொரு கல்வியாண்டின் முதல் பருவம் தொடங்குவதற்கு முன்பாகவே பல்கலைக்கழகத்திற்கு தெரிவிக்க வேண்டும். தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட பாடத்தினை மீண்டும் தொடங்குவதற்கு (Revival of the Programme) பல்கலைக்கழக ஆட்சிக்குழு தீர்மானத்தின்படி ஒரு பாட வகுப்பிற்கு ரூ.25,000/- + 18% GST செலுத்தி கல்வியாண்டு தொடங்கும் முன்பே பல்கலைக்கழகத்தின் முன்னனுமதி பெற்று அப்பாடத்தினை நடத்த வேண்டும்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை (Proforma) முறையாக பூர்த்தி செய்து அனுப்புவதுடன், அதனில் குறிப்பிடப்பட்டுள்ள பாடவகுப்புகளுக்கு (நிரந்தர / தற்காலிக ஆணை வழங்கும்போது) ஆய்வுக்குழு பரிந்துரை செய்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற உறுதிமொழியைத் தெரிவிக்க வேண்டும். மேலும், கல்லூரியில் நடைபெற்றுவரும் அனைத்து (தற்காலிக / நிரந்தர) வகுப்புகளின் (இளநிலை, முதுநிலை, பட்டயம், முதுகலைப் பட்டயம், சான்றிதழ், ஆய்வியல் நிறைஞர் மற்றும் ஆய்வியல் அறிஞர்) விவரங்களை அதற்கான பத்தியில் தனித்தனியாக தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அவ்வாறு பாடவகுப்புகளின் விவரம் தெளிவில்லாத நிலையில் பெறப்படும் கருத்துருக்கள் திருப்பியனுப்பப்படும் எனத் தெரிவிக்கலாகிறது.

**இணைப்பு:** படிவ வடிவம்

தங்கள் உண்மையுள்ள,

**பதிவாளர்(பொ.)**

## தற்காலிக இணைவு / ஒப்புதல் பெற்ற வகுப்புகளுக்கு 2024-2025-ஆம் கல்வியாண்டிற்கு தற்காலிக இணைவு/ஒப்புதல் நீட்டிப்பு பெறுவதற்கான

## படிவ வடிவம்

| | | |
|---|---|---|
| 01. | கல்லூரியின் பெயர் | |
| 02. | கல்லூரி தொடங்கப்பட்ட ஆண்டு | |
| 03. | கல்லூரி முதல்வரின் பெயர் | |
| 04. | கைப்பேசி / தொலைப்பேசி எண் | |
| 05. | தற்காலிக இணைவு/ அங்கீகாரம்/ஒப்புதல் பெற்று நடத்தப்படும் அனைத்து பாடங்களின் விவரங்கள்: (U.G. / P.G. / Dip. / P.G. Dip. / Certificate Programmes Ph.D.) | |

| வ. எண் | அரசு உதவிபெறும் பாடங்கள் மற்றும் சுயநிதி அடிப்படையில் நடைபெறும் பாடங்களின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்காலிக இணைவு / ஒப்புதல் பெற்ற ஆண்டு |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |

| | |
|---|---|
| 06 | நிரந்தர இணைவு பெற்று நடத்தப்படும் அனைத்து பாடங்களின் விவரங்கள;(U.G./ P.G. Programmes) |

| வ. எண | அரசு உதவிபெறும் பாடங்கள் / சுயநிதி அடிப்படையில் நடைபெறும் பாடங்களின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்காலிக இணைவு / ஒப்புதல் பெற்ற ஆண்டு | நிரந்தர இணைவு பெற்ற ஆண்டு |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |

| | |
|---|---|
| 07. | 2024-2025-ஆம் கல்வியாண்டிற்கு தற்காலிக இணைவு நீட்டிப்பு கோரும் பாடங்களின் விவரம் |

| வ. எண் | அரசு உதவிபெறும் பாடங்கள் / சுயநிதி அடிப்படையில் நடைபெறும் பாடங்களின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்காலிக இணைவு / ஒப்புதல் பெற்ற ஆண்டு |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |

| | | |
|---|---|---|
| 08. | 2023-2024-ஆம் கல்வியாண்டு வரை மேற்கண்ட பாடங்களுக்கு தற்காலிக இணைவு / ஒப்புதல் நீட்டிப்பு பல்கலைக்கழகத்திடம் பெறப்பட்டுள்ளதா? ஆம் எனில் அதன் நாள்: (நகல் இணைக்கவும்). | |

| | | |
|---|---|---|
| 09. | தங்கள் கல்லூரி 2(f) and 12(B) நிலை பெறப்பட்டுள்ளதா? ஆம் எனில் அதன் நாள்: (நகல் இணைக்கவும்). . | |
| 10. 1. | தற்காலிக இணைவு பெற்ற பாடங்கள் 2024-2025-ம் கல்வியாண்டில் தொடர்ந்து நடத்துவதற்கு இணைவு / ஒப்புதல் நீட்டிப்புச் செய்வதற்கான ஒவ்வொரு பாடத்திற்கும் (இளநிலை, முதுநிலை ஆய்வியல் அறிஞர், பட்டயம், முதுநிலைப் பட்டயம் மற்றும் சான்றிதழ் உள்பட) கட்டணம் செலுத்திய விவரம்: | |

| வ. எண் | அரசு உதவிபெறும் பாடங்கள் / சுயநிதி அடிப்படையில் நடைபெறும் பாடங்களின் பெயர் | தற்காலிக இணைவு / ஒப்புதல் பெற்ற ஆண்டு | செலுத்தப்பட்ட கட்டணம் ரூ. | 18% GST | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| | | கூடுதல் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 10.2. | சேவைக் கட்டணம் | 2000.00 | -- | |
| 10.3. | கடந்த கல்வியாண்டுகளில் நிறுத்திவைக்கப்பட்ட பாடங்களை இக்கல்வியாண்டில் தொடங்க அனுமதி கோரப்படுமாயின் அப்பாடங்களின் விவரங்கள் | | | |

| வ. எண் | பாடங்களின் பெயர்கள் | நிறுத்தி வைக்கப்பட்ட ஆண்டு | செலுத்தப்பட்ட கட்டணம் ரூ. | 18% GST | மொத்தம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| | | கூடுதல் | | | |

| வங்கியின் பெயர் | இணையதள ரசீது எண் மற்றும் நாள் | தொகை |
|---|---|---|
| | | |

## சான்றிதழ்

இணைவு பெற்று கல்லூரியில் நடத்தப்படும் தற்காலிக மற்றும் நிரந்தர இணைவு / ஒப்புதல் ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் ஆய்வுக்குழு பரிந்துரை செய்த நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று உறுதியளிக்கின்றேன்.

**முதல்வரின் கையொப்பம்**